வெற்றிடங்கள்

திட்ட உழியரை ஆட்சேர்ப்பு செய்தல்

இலங்கை மகாவலி அதிகாரசபை

கமக்கொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

மாதுரு ஓயா வலதுகரை அபிவிருத்தித் திட்டம் மற்றும் கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டம்

பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் சேவைகள் பிரிவு (வடிவமைப்பு குழு – கொழும்பு)

(மாதுரு ஓயா திட்டக் காலப்பகுதி 2026 – 2032, கிவுல் ஓயா திட்டக் காலப்பகுதி 2026 – 2031)

02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் பொருந்தக்கூடிய அரசாங்க வேலைக்கமர்த்துதல் நடைமுறைகளின் பிரகாரம், மாதுரு ஓயா வலதுகரை அபிவிருத்தித் திட்டம் மற்றும் கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றிற்கு முழுநேர ஒப்பந்த அடிப்படையில் திட்ட உழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகுதியும் அர்ப்பணிப்புமுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2026-03-28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் 02ஆவது நிரல் Iஆம் பின்னிணைப்பில் அடிப்படை தகுதிகள் மற்றும் அனுபவத் தேவைகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 02ஆம் நிரல் IIஆம் பின்னிணைப்பில் ஒவ்வொரு பதவிக்குமான சம்பளம் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

உதவி உழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு 10/2025ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை, 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் ஏனைய பொருந்தக்கூடிய அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

வெற்றிட விபரங்கள்

இல.	விவரணம் / வேலை இடம்	சம்பள அளவு	பதவிகளின் எண்ணிக்கை
1	பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் சேவைகள் பிரிவு – (வடிவமைப்புக் குழு), கொழும்பு	• 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை • உதவி உழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு 10/2025ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை	10

பொதுவான நிபந்தனைகள்

✓ விண்ணப்பதாரர்கள் 64 வயதிற்குக் கீழ் இருத்தல் வேண்டும். ஆங்கில மொழியில் புலமை, அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு என்பன அத்தியாவசிய தேவைப்பாடுகள் ஆகும். இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு-நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் முன்னைய அனுபவம் இருத்தல் கூடுதல் நன்மையாகக் கருதப்படும்.

✓ அரசாங்கம் அல்லது அரச சார்பற்ற துறையில் தற்போது வேலையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள/நிறுவனத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு:

- **இலங்கை மகாவலி அதிகாரசபையின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும் (MASL) – https://mahaweli.gov.lk**
- **தொடர்பு இல.: 0112 695972/0112 689743**
  (மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையினைப் பார்வையிட தயவுசெய்து நிதி அமைச்சின் வலைத்தளத்தைப் பார்வையிடவும்.)

✓ கீழுள்ள முகவரியைச் சென்றடையும் வகையில் 2026-11-30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக பதிவுத்தபாலில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியானது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆணையாளர் நாயகம்
இலங்கை மகாவலி அதிகாரசபை,
இல. 500, டி.பி. ஜாயா மாவத்தை,
கொழும்பு 10.

சுருக்கப்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஏதேனுமொரு வகையில் செல்வாக்குச் செலுத்த முயல்வது தகுதியீனத்திற்கு வழிவகுப்பதுடன் அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்ட விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஆணையாளர் நாயகம்
இலங்கை மகாவலி அதிகாரசபை.